1972 ஆகஸ்ட் 9]

கடன் வழங்க முன்வருவதில்லை. எனவே, விரைவிலே ஆய்வு நடத்திவிட்டால் ஒன்று கடன் வழங்கக்கூடாது என்று ஒரு குறித்த சட்டம் இயற்ற வாய்ப்பு இருக்கும் அல்லது அதுவரையிலாவது கடன்கள் வழங்க வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள நிலைமைகளை ஆய்வு செய்வதற்காக ஒரு இலாகா அமைக்கப் பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள் அந்தத் துறையின் மூலம் இப்போது செயலாற்றப்பட்டு வருகின்றன. இப்போது முழுவதுமாக ஏழு கோட்டங்கள் அமைக்கப்பட்டு, அந்தக் கோட்டங்கள் மூலமாக இந்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மதுரையிலுள்ள நில-நீர் கோட்டம் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களிலே இந்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தலைமை வேளாண்மை இயக்குனர் மேற் பார்வையில் இப்படிப்பட்ட திட்டங்களுக்கான ஆய்வுகள் நடந்துகொண்டு இருக்கின்றன.

கிழத்திருத்தங்கல் புதிய கண்மாய்

*16. வினு—**திரு. கா. காளிமுத்து** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூர் வட்டம், கிழத்திருத்தங்கல் புதிய கண்மாய்த்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது அது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ரூ. 2,00,000.

(இ) 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத அளவில் முடிக்கப்படும்.

மீனுட்சிபுரத்தில் புதிய கண்மாய்

*17. வினு—**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி** : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) அருப்புக்கோட்டைத் தாலுக்காவில் மறவர் பெருங்குடி மீனுட்சி புரத்தில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு, தண்ணீர் போதுமானதாக இல்லையால் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டம் பல ஆண்டுகளாக ஆய்வு நிலையில் இருந்தது. மிகவும் அவசியமான இந்தத் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்து—'ப்ரையாரிடி' கொடுத்து—இதைச் செயலாக்க முனைந்திருந்தால், இந்தத் திட்டம் எப்போதோ நிறைவேற்றப்பட்டிருக்கும். இது மிகவும் அவசியமானதொரு திட்டம். எனவே, அரசு இதை மறுபரிசீலனைசெய்து இந்தத் திட்டத்தை அமுல் படுத்துவதற்கு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவரவர்களே, கஞ்சனோடை திட்டத்தின்கீழ் ரூ. 1,55,000-ல் ஒரு கால்வாயையும், ரூ. 4,20,000-ல் ஒரு கண்மாயையும் அமைக்கத் திட்டமிட்டு இந்த இரண்டு திட்டங்களில் முதல் திட்டத்திற்கு அரசு ஆணை பிறப்பித்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இரண்டாவது திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. தண்ணீர் போதுமான அளவில் இல்லாத காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திட்டம் தற்போது கைவிடப்பட்டிருக்கிறது. நிலைமை சீரடையும்போது இதை மறு பரிசீலனை செய்யலாம்.

வரதமாநதியின் குறுக்கே அணை

*18. வினா—புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் பழனிக்கருகில் உள்ள வரதமாநதி அணைக் கட்டுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கான குறிப்பை பாசனத் தலைமைப் பொறியாளர் வருவாய்த்துறை வாரியத்தின் மூலம் அனுப்பியிருக்கின்றார். வருவாய்த்துறை வாரியத்தின் குறிப்பு கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப் படும்.

புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டமானது அந்தப் பகுதி வாழ் மக்களால் கடந்த நாற்பது ஆண்டுகாலமாக விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டுவந்த திட்டமாகும். கடந்த இருபது ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் இந்தத் திட்டம் மறுக்கப்பட்டே வந்தது. நமது பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், மதிப்பிற்குரிய நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய முயற்சியினால் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இத்திட்டத்தினை